City of Mississauga
300 City Centre Drive
Mississauga, ON L5B 3C1

# News Release

mississauga.ca facebook.com/citymississauga x.com/citymississauga

## Mississauga வில் பட்டாசுகளைப் பயன்படுத்துவது பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியவை

தீப்பிடித்தல் மற்றும் காயம் ஏற்படும் அபாயத்தைக் குறைத்து உங்கள் கொண்டாட்டங்களை மகிழ்ச்சியுடன் அனுபவியுங்கள். Mississauga வில் எப்போது, எங்கே பட்டாசுகளைக் கொளுத்தலாம், எந்த வகையான பட்டாசுகள் அனுமதிக்கப்படுகின்றன மற்றும் விதிகள் என்னென்ன என்பதைக் கண்டறியுங்கள். நகரத்தின் பட்டாசுகள் பேரிலான துணைச் சட்டத்தைப் பின்பற்றுவதன் மூலம், அனைவருக்கும் பாதுகாப்பான மற்றும் மகிழ்ச்சியான கொண்டாட்டங்களை உறுதிசெய்ய நீங்கள் உதவுவீர்கள்.

பிப்ரவரி 6, 2026

பலருக்கும், கொண்டாட்டங்கள் மற்றும் சிறப்பு நிகழ்வுகளுக்கு பட்டாசுகள் ஒரு முக்கிய அங்கமாக உள்ளன. ஒரு விடுமுறை, கொண்டாட்டம் அல்லது மகிழ்ச்சியான நிகழ்விற்காகவோ, அல்லது மத அல்லது கலாச்சார காரணங்களுக்காகவோ, அதன் பிரகாசமான ஒளிகள், அழகான வண்ணங்கள் மற்றும் ஒலிகள் பழைய நினைவுகளைத் தூண்டக்கூடியவையாக இருக்கும்.

Mississauga வில், சமூகத்தில் உள்ள அனைவரின் பாதுகாப்பு மற்றும் மகிழ்ச்சியை உறுதி செய்வதற்காக, பட்டாசுகளின் பயன்பாட்டு விதிகள், வழிகாட்டுதல்கள் மற்றும் பட்டாசுகள் பேரிலான நகரத்தின் துணைச் சட்டத்தினால் ஒழுங்குபடுத்தப்படுகிறது. அனைத்து குடியிருப்பாளர்களும் பட்டாசுகள் பேரிலான நகரத்தின் துணை விதியை அறிந்து கொள்வதும், பட்டாசுகள் என்றால் என்ன, எந்தப் பட்டாசுகள் தடைசெய்யப்பட்டுள்ளன, அவற்றை எவ்வாறு மற்றும் எப்போது பயன்படுத்தலாம், மற்றும் அவற்றின் பயன்பாட்டைச் சுற்றியுள்ள பாதுகாப்புக் கவலைகள் என்னென்ன என்பதைப் புரிந்து கொள்வதும் முக்கியம்.

உங்களுக்கும் உங்களைச் சுற்றியுள்ளவர்களுக்கும் பாதுகாப்பிற்கே எப்போதும் முன்னுரிமை அளியுங்கள்.

### பட்டாசுகள் என்றால் என்ன?

பட்டாசுகள் என்பவை அழகியல் மற்றும் பொழுதுபோக்கு நோக்கங்களுக்காக வடிவமைக்கப்பட்ட வெடிமருந்து நிரப்பிய வெடிபொருட்களாகும். அவை எரிதல், வெடித்தல் அல்லது இவ்விரண்டின் கலவையின் மூலம் காட்சி மற்றும் ஒலி விளைவுகளை உருவாக்க வடிவமைக்கப்பட்டுள்ளன. அவை பல்வேறு வடிவங்கள், அளவுகள் மற்றும் விளைவுகளில் வருகின்றன, பெரும்பாலும் பிரகாசமான வண்ணங்கள் மற்றும் சிக்கலான வடிவங்களைக் கொண்டுள்ளன.

கனடாவின் தேசிய வளங்கள் (National Resources Canada) அமைப்பின்படி, பட்டாசுகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்:

- நுகர்வோர் பட்டாசுகள்: வெளிப்புற மகிழ்ச்சிக்காக வடிவமைக்கப்பட்டவை மற்றும் பொதுமக்களால் பயன்படுத்தப்படலாம். புஸ்வாணங்கள், சக்கரங்கள் அல்லது பெரிய அளவிலான புஸ்வாணங்கள் ஆகியவை எடுத்துக்காட்டுகள் ஆகும். இருப்பினும், பின்பற்றப்பட வேண்டிய சில விதிமுறைகளுடன் அவை வருகின்றன.

- புதுமையான சாதனங்கள்: இவை பெரும்பாலும் திறந்தவெளியில், அந்தந்த வகைக்கு ஏற்ப பயன்படுத்தப்படுகின்றன. மத்தாப்புக்கள் போன்ற இந்தச் சாதனங்கள், குறைந்த அளவிலான, பார்வைக்குத் தெரியக்கூடிய அல்லது கேட்கக்கூடிய விளைவுகளை உருவாக்குகின்றன, மேலும் இவற்றில் குறைந்த அளவு பைரோடெக்னிக் கலவை உள்ளது.

## நகர நிர்வாகம் ஏன் பட்டாசுகளுக்கு அனுமதி வழங்குகிறது?

மக்கள் கொண்டாடுவதற்கான ஒரு வழியை பட்டாசுகள் வழங்குகின்றன. அவை கலாச்சார அடையாளத்தைப் பாதுகாப்பதிலும், மத மரபுகளைக் கடைப்பிடிப்பதிலும், பகிரப்பட்ட அனுபவங்கள் மூலம் சமூகங்களை ஒன்றிணைப்பதிலும் ஒரு பங்கைக் கொண்டுள்ளன. பல Mississauga குடியிருப்பாளர்களுக்கு, பட்டாசுகள் வெறும் பொழுதுபோக்கிற்கும் அப்பாற்பட்டு மேலானவையாகும் மற்றும் அர்த்தமுள்ள சின்னங்களாகவும் இருக்கக் கூடும். மகிழ்ச்சியான தருணங்கள் அல்லது வரலாற்று நிகழ்வுகளைக் குறிக்க அவற்றைப் பயன்படுத்தலாம். மக்கள் தங்கள் பாரம்பரியம், ஆன்மீக நம்பிக்கைகளுடன் இணையவும், பிரமிப்பு, ஒற்றுமை மற்றும் பெருமை உணர்வுடன் கொண்டாடவும் பட்டாசுகள் உதவ முடியும்.

பட்டாசுகள் பேரிலான நகரின் துணைச் சட்டமானது, நிர்ணயிக்கப்பட்ட வரம்புகளுக்குள் பட்டாசுகளை அனுமதிப்பதுடன், பொதுப் பாதுகாப்பு மற்றும் சமூக நலனுக்கு முன்னுரிமை அளிக்கும் அதே வேளையில், Mississauga வின் கலாச்சாரப் பன்முகத்தன்மையையும் மதிக்கிறது. இந்த விதிகள் சமூகப் பிணைப்புகளை வலுப்படுத்த உதவுகின்றன, அதே நேரத்தில் செல்லப்பிராணிகள், வனவிலங்குகள் மற்றும் சுற்றுச்சூழலின் மீது பட்டாசுகள் ஏற்படுத்தக்கூடிய தீங்கு விளைவிக்கும் தாக்கங்களையும் குறைக்கின்றன. ஒட்டுமொத்தமாக, இந்த அணுகுமுறை, Mississaugaவில் தமது வீடுகளைக் கொண்ட மக்களைப் பிரதிபலிக்கும் என்பதுடன், அனைவரையும் உள்ளடக்கிய, துடிப்பான நகரத்தை ஆதரிக்கிறது.

## Mississaugaவில் பட்டாசுகள் மீதான புதிய விதிகள்

கடந்த அக்டோபர் 15, 2025 அன்று, Mississauga நகர மன்றம், மேலும் கட்டுப்பாடுகளைச் சேர்ப்பதற்காக பட்டாசுகள் பேரிலான துணைச் சட்டத்தைத் திருத்த வாக்களித்தது, அவற்றுள் அடங்குபவை:

- பட்டாசுகள் பயன்படுத்தவேண்டிய நேரத்தைக் குறைத்தல் (லூனார் புத்தாண்டு, விக்டோரியா தினம், கனடா தினம் மற்றும் தீபாவளி ஆகிய நாட்களில் மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை; புத்தாண்டு இரவு அன்று இரவு 11 மணி முதல் அதிகாலை 1 மணி வரை).
- ரோமன் கேண்டில் பட்டாசுகளை விற்பனை செய்வது, பயன்படுத்துவது, வைத்திருப்பது மற்றும் விநியோகிப்பது ஆகியவற்றைத் தடை செய்தல்.
- விடுமுறைக்கு முந்தைய 10 நாட்களுக்கு மட்டுமே என, பட்டாசு விற்பனையை கட்டுப்படுத்துதல், ஆனால் விடுமுறை நாளில் அல்ல.
- பட்டாசு விற்பனையாளர்கள் தங்கள் பட்டாசுகளின் சரக்கிருப்பு மற்றும் விற்பனை குறித்த பதிவேட்டை நகர நிர்வாகத்திடம் வழங்க வேண்டும் என்று கோருதல்.

- காட்சிக்காக அல்லது தொழில்முறை சார்ந்த பட்டாசுகளுக்கான அனுமதிகள் மட்டுமே வழங்கப்படும் (நுகர்வோர் பட்டாசுகளுக்கு அனுமதிகள் வழங்கப்படாது).

இந்த மாற்றங்கள் கடந்த டிசம்பர் 10, 2025 அன்று நகரசபையால் அங்கீகரிக்கப்பட்டன, அதைத் தொடர்ந்து ஜனவரி 2, 2026 முதல் நடைமுறைக்கு வந்துள்ளன.

## Mississaugaவில் பட்டாசுகளைப் பாதுகாப்பாகப் பயன்படுத்துதல்

பட்டாசுகளைப் பாதுகாப்பாகப் பயன்படுத்துவது எப்படி என்பதைப் புரிந்துகொள்வது, காயங்கள், தீ விபத்துகள் அல்லது சொத்து சேதங்களைத் தடுக்க உதவும். விடுமுறைக்குத் திட்டமிடும்போது, பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளியுங்கள். அனைவரையும் பாதுகாப்பாக வைத்திருக்க, பட்டாசுகளைப் பயன்படுத்துவதற்கு முன்னதாக உங்கள் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் பேசுங்கள்.

- நுகர்வோர் பட்டாசுப் பொருட்களை வாங்க, சேமிக்க மற்றும் பயன்படுத்த உங்களுக்குக் குறைந்தது 18 வயது ஆகியிருக்க வேண்டும்.
- உரிமம் பெற்ற விற்பனையாளர்களிடமிருந்து மட்டுமே வாங்குங்கள்.
- பட்டாசுகள் பாதுகாப்பாகவும், குழந்தைகளின் கைக்கு எட்டாத வகையிலும் சேமிக்கப்படுவதை உறுதிசெய்யவும்.
- ஒவ்வொரு பொருளின் மீதும் உள்ள வழிகாட்டுதல்கள், எச்சரிக்கைகள் மற்றும் எச்சரிப்புகளை முழுமையாகப் படித்துப் புரிந்து கொள்ளுங்கள்.
- உங்கள் சொந்த நிலத்தில், தெளிவான, திறந்தவெளி இடத்தில் வெளியே அமைக்கவும்.
- ஒரு வாளி தண்ணீர் அல்லது தண்ணீர் வரக்கூடிய ஒரு குழாயை அருகில் வைத்திருங்கள்.
- மற்றவர்கள், வீடுகள், மரங்கள் மற்றும் எரியக்கூடிய பொருட்களிலிருந்து பட்டாசுகளைத் தூரமாக அப்புறப்படுத்தவும்.
- எப்போதும் குழந்தைகளைக் கண்காணித்தபடி இருங்கள், மேலும் வேடிக்கை பார்ப்பவர்கள் பாதுகாப்பான தூரத்தில் இருப்பதையும் உறுதி செய்யுங்கள்.
- பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத பட்டாசுப் பொருட்களைப் பாதுகாப்பாக அப்புறப்படுத்துங்கள். பட்டாசுப் பொருட்களை முழுமையாக நீரில் மூழ்கடித்து இரவு முழுவதும் ஊறவையுங்கள். ஊறவைத்த பட்டாசுப் பொருட்களை ஒரு பிளாஸ்டிக் பையில் சுற்றி குப்பைத் தொட்டியில் வீசிவிடுங்கள்.

பட்டாசுகளைப் பயன்படுத்திய இடத்தை சுத்தம் செய்ய நினைவில் கொள்ளுங்கள். குப்பை கூளங்களை யாரும் விரும்புவதில்லை.

## பட்டாசுகளுக்கு மாற்றுகள்

பட்டாசுகளின் பயன்பாட்டால் ஏற்படும் தீங்கைக் குறைக்க, மத்தாப்புக்கள், பிரகாசிக்கும் குச்சிகள், பிரகாசிக்கும் சாட்டைகள் அல்லது எல்இடி விளக்குகள் போன்ற பட்டாசுகளுக்கு மாற்றானவற்றைப் பயன்படுத்துங்கள்.

காற்று மாசுபாடு, இரைச்சல் தொந்தரவுகள், வனவிலங்குகளுக்கு தீங்கு, கழிவுப் பொருட்களை உருவாக்குதல் மற்றும் அதிகரித்த தீ அபாயங்கள் உட்பட பல சுற்றுச்சூழல் தாக்கங்களை பட்டாசுகள் கொண்டுள்ளன.

News Release

City of Mississauga
300 City Centre Drive
Mississauga, ON L5B 3C1

MISSISSAUGA

mississauga.ca facebook.com/citymississauga x.com/citymississauga

அவை தூசுகளை வெளியிடுகின்றன, இது குறுகிய கால காற்று மாசுபாடு உண்டாகக் காரணமாகின்றன மற்றும் சுவாசப் பிரச்சனைகளை இன்னும் மோசமாக்கக்கூடும். உரத்த வெடிப்புகள், இரைச்சல் ஆகியவை மாசுபாட்டை உருவாக்குகின்றன, இது குடியிருப்பாளர்கள், வனவிலங்குகள் மற்றும் செல்லப்பிராணிகளைத் தொந்தரவு செய்து, பெரும்பாலும் மன அழுத்தம் அல்லது திசைதிருப்பலுக்கு காரணமாகிறது. பட்டாசுகள் குப்பைகளை உருவாக்கும் கழிவுகளையும் விட்டுச் செல்கின்றன, மேலும் பாதுகாப்பற்ற பயன்பாடு தீப்பற்றக்கூடிய அபாயங்களை அதிகரித்து, சொத்துக்கள் மற்றும் உள்ளூர் சூழலமைப்புகளுக்கு அச்சுறுத்தலாகவும் அமையும்.

## ஒலி இரைச்சல் அளவுகள் மற்றும் செல்லப்பிராணிகள்

பட்டாசுகள் சத்தமாகவும் இரைச்சலாகவும் இருக்கும். இந்த உரத்த ஒலிகள் செல்லப்பிராணிகளுக்கு மன அழுத்தத்தையும், சில குடியிருப்பாளர்களுக்கு மன உளைச்சலையும் ஏற்படுத்தக்கூடும். அதன் தாக்கத்தைக் குறைக்க, பட்டாசு வெடிக்கும் உச்ச நேரங்களில் விலங்குகளை வீட்டிற்குள் வைத்திருத்தல், அமைதியான மற்றும் வசதியான இடத்தை உருவாக்குதல், மற்றும் தமது செல்லப்பிராணிகளை அமைதியாக வைத்திருக்க உதவும் தளர்வு நுட்பங்கள் அல்லது இசையைப் பயன்படுத்துதல் போன்ற முன்தடுப்பு நடவடிக்கைகளை செல்லப்பிராணி வளர்க்கும் உரிமையாளர்கள் எடுக்கலாம்.

சத்தத்தால் எளிதில் பாதிக்கப்படுபவர்கள், அதாவது உரத்த மற்றும் கணிக்க முடியாத ஒலிகளை மன அழுத்தமாகக் கருதுபவர்கள், காதடைப்பான்கள், ஒலி இயந்திரங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதன் மூலமோ அல்லது அதிக பட்டாசு வெடிக்கும் செயல்பாடுகள் உள்ள பகுதிகளிலிருந்து விலகி அமைதியான நேரத்தைத் திட்டமிடுவதன் மூலமோ பயனடையலாம்.

## சட்டவிரோத பட்டாசுப் பயன்பாட்டு பற்றி புகாரளியுங்கள்

உங்கள் சுற்றுப்புறம் அல்லது சமூகத்தில் யாராவது பட்டாசுகளைத் தவறாகப் பயன்படுத்தினால், தயவுசெய்து 311 என்ற எண்ணை அழைக்கவும். தீப்பிடித்தல், காயம் அல்லது மரணம் போன்ற அவசரநிலைகள் போன்றவை இருந்தாலே அன்றி, பட்டாசுகள் தொடர்பான புகார்களுக்கு 911-ஐ அழைக்க வேண்டாம்.

குடியிருப்பாளர்கள் நகரத்தின் இணையதளம் மூலம் ஆன்லைனிலும் புகார் அளிக்கலாம் மற்றும் பகல் அல்லது இரவு எந்த நேரத்திலும் பட்டாசுகளைத் தவறாகப் பயன்படுத்துவதைப் பற்றிப் புகார் தெரிவிக்கலாம். குடியிருப்பாளர்கள் புகாரைச் சமர்ப்பித்தவுடன், தேவைப்பட்டால் நகரத்தின் சட்ட அமலாக்கப் பணியாளர்கள் செவிசாய்ப்பார்கள்.

## மேலும் அறிக

- Mississaugaவில் பட்டாசுகளின் பயன்பாடு குறித்த கூடுதல் தகவல்களுக்கு mississauga.ca/fireworks என்ற இணையதளத்தைப் பார்வையிடவும்.
- தீயிலிருந்து பாதுகாப்பு குறித்த கூடுதல் தகவல்களுக்கு mississauga.ca/fire ஐப் பார்வையிடவும்.